முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No.4/2022

PW1 மகேஸ்வரி நாள் 18.03.2024

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தான் வழக்கறிஞரிடம் தகவல் சொல்லி வழக்கு போட்டு முதல் விசாரணை வாக்குமூலமும் தாக்கல் செய்துள்ளேன். பொது குடும்ப சொத்தில் உரிமை கேட்டு வழக்கு போட்டுள்ளேன். பூர்வீக நிலத்தில் பங்கு கேட்டு தான் வழக்கு போட்டுள்ளேன். என் மாமனார் 2, 3, 4 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய சொத்தில் பாகம் கேட்கிறேன். என் கணவர் நடராஜமூர்த்தி 1ம் பிரதிவாதியின் மகன். எனக்கும் நடராஜமூர்த்திக்கும் 2006 ல் திருமணம் நடந்தது. பூர்வீக சொத்து மொத்தம் 4 ஏக்கர் 20 செண்ட் ஆகும். என் திருமணத்திற்கு முன்பாகவே 2 1/2 ஏக்கர் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு என்னுடைய திருமணத்திற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அவர்களது திருமணத்திற்கு என்ன சீர்வரிசை செய்தார் என்று எனக்கு தெரியாது. மீதமுள்ளது 1 ஏக்கர் 70 செண்ட் என்றால் சரிதான். அதில் 1/5 பாகம் 34 செண்ட் என்றால் சரிதான். 16.03.2012 ல் 1 ஏக்கர் 70 செண்ட் ல் என்னுடைய மகனுக்கு 1 ஏக்கரை தானசெட்டில்மெண்டாக 1-ம் பிரதிவாதி எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள 70 செண்ட்டை 2, 3, 4 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்டாக என் மாமனார் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என் மாமனார் பூர்வீக சொத்தில் பாகம் ஒதுக்கி கொள்ளவில்லை. பூர்வீக சொத்தை விற்றதில் என் மாமனார் , ரூ.2 இலட்சம் என் கணவர் பெயரில் வங்கி நிரந்தர வைப்பீடு செய்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய திருமணத்தின் போது பூர்வீக இடத்தில் புதியதாக வீடு கட்டப்பட்டிருந்தது. LIC ல் என் மாமனார் என் கணவர் பெயருக்கு பாலிசி எடுத்து பணம் கட்டிகொண்டிருந்தார் என்றால் சரியல்ல. என் மாமனார் வருடத்திற்கு ரூ.5,000/- கட்டியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. 26.09.2014 ல் நடேசன் மகன் செல்லப்பிள்ளை என்பவரிடம் என் கணவர் என் மகன் பேரில் இருந்த 1 ஏக்கர் நிலத்தில் 20 செண்ட் விற்றார் என்றால் எவ்வளவு விற்றார் என்று தெரியவில்லை. ஆனால் 1 பகுதி விற்றுவிட்டார். 06.07.2020 ல் நான் 20 செண்ட்டை மனோகர் என்பவருக்கு விற்றுவிட்டேன் என்றால் 2019 ல் விற்றேன்.திருமணம் ஆகி 3 ஆண்டுகள் நான் கூட்டுகுடும்பத்தில் இருந்தேன். நான் 3 மாதங்கள் தான் இருந்தேன் என்றும், பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2020 ல் என் மாமனார் என் கணவருக்கு கொடுத்திருந்த ரூ.7 இலட்சம் பணத்தை முத்துசாமி மகன் கர்ணனுக்கு கொடுத்து அவர் பெயரில் வீடு

வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. கர்ணனின் சகோதரி ஆட்டோராணிக்கு என் கணவரின் பணத்தை கொடுத்து திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரியல்ல. ஆட்டோராணி என்னுடைய சகோதரி. என் கணவரின் பணத்தை வைத்து நான் கர்ணனுக்கு பெட்டி கடை வைத்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தான் பெட்டி கடை வைத்தேன். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2, 3 அயிட்ட சொத்துக்களை பூர்வீக சொத்தை விற்று வந்த வருமானத்தை வைத்து தான் என் மாமனார் வாங்கினார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மாமனார் கறவை மாடு வைத்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. என் மாமனார் லோடுமேனாக போனார் என்றும், கறவை மாடு வைத்து வியாபாரம் செய்தார் என்றும், அதிலிருந்து வந்த வருமானத்தை வைத்து தான் 2, 3 அயிட்ட சொத்துக்களை வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல.3 ம் பிரதிவாதியின் கணவர் அரசு ஊழியர் என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதி செல்லம் கணவர் வீட்டிலும் நிறைய சொத்து பத்துகள் இருந்தன என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் 4 பிரதிவாதிக்கு ஆதரவு செய்ய வேண்டும் என்பதற்காக அவர்களுடைய கணவர் வருமானத்தை வைத்து 4 வது அயிட்ட சொத்தை 2, 3, 4 பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. 4 வது அயிட்ட சொத்து, 2,3 அயிட்ட சொத்துக்களை கிரையம் வாங்கும்போது என் கணவர் உயிருடன் தான் இருந்தார். பூர்வீக சொத்துக்களில் இருந்து 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை கிரைய வாங்கியிருந்தால் என் கணவர் ஆட்சேபணை செய்திருப்பார் என்றும், அவ்வாறு வாங்காததால் தான் ஆட்சேபணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளின் சுய சம்பாதியத்தை கொண்டு 4 வது அயிட்ட சொத்தை வாங்கியுள்ளார். அதில் 5 ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. 2, 3 அயிட்ட சொத்துக்கள் மாமனார் அவருடைய சுய சம்பாதியத்தில் வாங்கியது என்றால் சரியல்ல. அதனால் தான் அவர் அந்த சொத்துக்களை 2, 3, 4 பிரதிவாதிகளுக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் 01.06.2018 ல் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இறந்துவிட்டார். சீதாலெட்சுமியின் கணவர் தான் என் கணவரின் உடலை கையெழுத்து போட்டு வாங்கினார் என்று சொன்னால் அவர் எனக்காக தான் கையெழுத்து போட்டு வாங்கினார். நான் அந்த இடத்தில் இல்லை என்று சொல்வது சரியல்ல. நான் அழுதுகொண்டிருந்ததால் என்னை வீட்டிற்கு போக சொல்லிவிட்டு அவர் கையெழுத்து போட்டு என் கணவரின் உடலை கொண்டு வந்தார். நான் தான் என் கணவரை மருத்துவமனையில் சேர்த்தேன். அதற்கான

ஆவணம் என்னிடம் இல்லை. பதற்றத்தில் ஆவணம் வாங்கவில்லை. என் நடவடிக்கை சரியில்லை என்றும், அதிக குடிபழக்கம் இருந்ததது என்றும், அதனால் அவரே போய் மருத்துவமனையில் சேர்ந்துகொண்டார் என்றால் சரியல்ல. அவர் 3 ம் பிரதிவாதியின் கணவருக்கு போன் மூலம் தகவல் சொல்லி மருத்துவமனைக்கு வரசொன்னார் என்றால் சரியல்ல. என் மாமனார் பூர்வீக சொத்துக்களை அவரவருக்கு பிரித்து கொடுத்துவிட்டார்என்றும், எனவே பாகம் பிரிக்க கூடிய சொத்துக்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையத்திற்கு வாங்கிய சொத்தை மட்டும் தான் பாகம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. நான் சேர்க்க வேண்டிய சொத்துக்களை சேர்க்காமல் விட்டுவிட்டேன் என்றும்,தேவையான நபர்களை சேர்க்கவில்லை என்றும், அதனால் தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. என் மாமனார் தானசெட்டில்மெண்ட் எழுதிய பொறாமையால் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**1 ம் பிரதிவாதி தரப்பில் 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை யை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.**

**5 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**